**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2, மேட்டூர்**

சி.சி. 145/20 நாள் 06.08.2021

அ.சா. 1 பெருமாயி க.பெ ஈஸ்வரன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

மு.வி

நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வீட்டில் தான் உள்ளேன். சுமார் 2, வருடங்களுக்கு முன்பு எனது கோழி எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதுக்குடீ தேவடியா கண்டார ஓலி உன் கோழி என் வீட்டிற்கு வருது என்று எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி என்னை கையால் கிழே தூக்கி அடித்தார். அதில் எனக்கு இடது கைப்பக்கம் தோளில் அடிப்பட்டு என்னை சேலம் அரசு மருத்துவமணைக்கு 108 ஆம்பூலன்சில் சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. ஆஜர்எதிரி தான் என்னை அடித்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

கு.வி

இல்லை.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2, மேட்டூர்**

சி.சி. 145/20 நாள் 06.08.2021

அ.சா. 2 பாக்கியம் க.பெ ஆறுமுகம்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

மு.வி

நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வீட்டில் தான் உள்ளேன். அ.சா.1 எனது பக்கத்துவீட்டுக்காரர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு அ.சா.1ன் கோழி எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி அ.சா.1ஐ அடித்து விட்டார். அடிப்பட்ட அ.சா.1ஐ அவரது கணவர் சேலம் அரசு மருத்துவமணைக்கு 108 ஆம்பூலன்சில் சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். 3 நாள் சிகிக்சைக்கு் பின்னிட்டு அவர் திரும்பி வந்துவிட்டார். அ.சா.1ம் ஆஜர் எதிரியும் சண்டை போட்டுகொண்டார்கள். நான் சென்றபோது எதிரி அடித்துவிட்டு ஓடிவிட்டார். ஆஜர் எதிரி தான் அ.சா.1ஐ அடித்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

கு.வி

இல்லை.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2, மேட்டூர்**

சி.சி. 145/20 நாள் 06.08.2021

அ.சா. 3 ஈஸ்வரன் த.பெ சோலையப்பன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

மு.வி

நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மேசன் வேலைக்கு செல்கிறேன். அ.சா.1 எனது மனைவி. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எங்களது கோழி எதிரியின் வீட்டிற்கு சென்றதால் எதற்கு எங்களது விட்டிற்கு கோழி வந்தததது என்று எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி எனது மனைவியை அடித்து விட்டதாக எனக்கு தகவல் கிடைத்து நான் வந்து எனது மனைவியை ஆம்பூலன்ஸ் மூலம் ஜலகண்டாபுரம் மருத்துவமனைக்கும, பின்பு சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். ஆஜர் எதிரி தான் அடித்துவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டு சென்று விட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

கு.வி

இல்லை.